ARAN International e-Journal of Tamil Research

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்

(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)

ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief

Dr PRIYAKRISHNAN

Publisher

MR P. JAYAKRISHNAN

Editorial Board Members

Dr V SELVAKUMAR

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

Dr. Ravindran A/L Maraya

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

Dr Silllalee A/L S.Kandasamy

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

Dr. S. KAVITHA

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

Dr (Ms.) NILANKA LIYANAGE

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr B. DHANANJAYAN

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

Dr P.SEKAR

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்

சங்க இலக்கியத்தில் பூக்கள்

Flowers in Sangam literature

அ.கிருஷ்ணமூர்த்தி, முனைவர் பட்ட ஆய்வாளர்

(Ref. No. BDU2010632778754/Confirm/dt: 07.12.2020)

தமிழாய்வுத்துறை, மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தத்தனூர், அரியலூர் மாவட்டம் — 621 805, தமிழ்நாடு, இந்தியா.

(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது)

A. Krishnamoorthy, *Ph.D. Research Scholar, Department of Tamil, Meenakshi Ramasamy Arts & Science College,Thathanur, Ariyalur-621805, Tamilnadu, India.*

(Affiliated to Bharathidasan University, Tiruchirappalli)

ORCid: https://orcid.org/0009-0004-1489-1518

முனைவர் கு.சந்திரசேகரன், உதவிப் பேராசிரியர் - ஆய்வு நெறியாளர், தமிழாய்வுத்துறை, மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தத்தனூர், அரியலூர் மாவட்டம் — 621 805, தமிழ்நாடு, இந்தியா. (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது)

Dr. G. Chandrasekaran, *Research Supervisor, Assistant Professor, Department of Tamil, Meenakshi Ramasamy Arts & Science College,Thathanur, Ariyalur-621805, Tamilnadu, India.*

(Affiliated to Bharathidasan University, Tiruchirappalli)

ORCid: https://orcid.org/0009-0008-4013-0578

Abstract

Palandamis lived in harmony with nature. They divided the land they lived in into five parts and named the land after the best plant in that land. They are Kurinji, Mullai, Marutham, Neithal and Balai. The purpose of this paper is to investigate the plant species found in these five types of land. They are the basic source of all life on earth. It is plants that provide the three basic needs of man - food, clothing and shelter. The stories about plants, vines, flowers, trees etc. that were used in life are proof of the perceptive nature of the ancient poets. This article explains the messages about flowers among them.

Keywords: Flowers, plant, lotus, cantaloupe, mulberry, musundai, baganrai, narandam.

ஆய்வுச் சுருக்கம்

பழந்தமிழர்கள் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்தனர். அவர்கள் வாழ்ந்த நிலவமைப்பை ஐந்தாகப் பகுத்து அந்நிலங்களில் உள்ள மிகச் சிறந்த தாவரத்தின் பெயரையே அந்நிலத்திற்குப் பெயராகச் சூட்டியுள்ளனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாகும். இவ்வைந்து வகை நிலங்களில் காணப்படும் தாவர இனங்களில் பூக்கள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பூமியில் வாழும் உயிர்கள் அனைத்திற்கும் அடிப்படை ஆதாரமாக இருப்பவை. மனிதனுக்கு அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறைவிடம் மூன்றையும் அள்ளித் தருவது தாவரங்களே. வாழ்க்கையின் பயன்பாட்டில் இருந்த செடிகள், கொடிகள், பூக்கள், மரங்கள் முதலானவை குறித்த செய்திகள் பண்டைய புலவர்களின் உற்றுநோக்கல் பண்பிற்குச் சான்றாக விளங்குகின்றன. இவற்றுள் பூக்களைப் பற்றிய செய்திகளை இக்கட்டுரை விளக்குகிறது.

கருவிச்சொற்கள்: பூக்கள், தாவரம், தாமரை, காந்தள், முல்லை, முசுண்டை, பகன்றை, நரந்தம்.

முன்னுரை

நாம் வாழும் பூமியானது உயிர்ப்புடன் செயல்படுகிறது என்றால் பூமியின் வளிமண்டலம் பிராண வாயுவால் நிறைந்து இருப்பதே காரணம். பிராண வாயுவும் கரிய அமிலவாயுவும் வளிமண்டலத்தில் நிறைந்திருந்தாலும் மனிதகுலம் செழிக்க உயிர் மூச்சாக விளங்குவது ஆக்சிஜன் எனப்படும். பிராணவாயுவே ஆகும். வளிமண்டலத்தில் பிராணவாயுவை நிலைத்திருக்கச் செய்யும் வரும் காரணியாக விளங்குபவை தாவரங்கள். உயிரினங்களில் மிக சிறப்பானவை தாவரங்கள் ஆகும். ஏனெனில் தங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை தாங்களே தயாரித்துக் கொள்ளும் திறன் தாவரங்களைத் தவிர மற்ற எந்த உயிரினங்களுக்கும் இல்லை. சூரிய சக்தியினை நேரடியாக பயன்படுத்தும் திறன் பெற்றவை பசுமைத் தாவரங்கள் மட்டுமே. தாவர உயிர்களில் புல், பூண்டு, செடி, கொடி, மரம் முதலிய பலவும் அடங்குவன. இவை பலவற்றிற்கும் மலர்கள் உள்ளன. அம்மலர்கள் பூத்து, காய்களாகக் காய்த்து, பழங்களாகக் கனிகின்றன. அவற்றைப் பண்டைய புலவர்கள் கண்டு விளக்கியுள்ளனர். பழங்கள் அனைத்தும் ஒரே தன்மையினதாய் இருத்தல் இல்லை. ஒவ்வொன்றும் உருவத்தாலும், நிறத்தாலும், சுவையாலும் வேறுபாடடைந்துள்ளன. அவ்வேறுபாடுகளை மிகவும் நுண்மையாக ஆராய்ந்து பாடல்களில் பதிவு செய்துள்ளனர். சங்க இலக்கியங்களில் பல்வேறு தாவரங்களைப் பற்றிய செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தாவரம் — பொருள் விளக்கம்

தா என்று கேட்காமலேயே வரங்கள் பல தந்து உதவும் தனி உலகம் தாவர உலகம் தான். உணவு, உடை, உறைவிடம் மற்றும் ஆக்சிஜன், மழை, நோய் தீர்க்கும் மருந்துகள் போன்றவை தாவரங்கள் நமக்கு அளிக்கும் வரங்கள் ஆகும். தாவர உயிர் விளக்கத்தை "பாட்டனி" என்ற சொல்லால் குறிப்பிடுவர் "*Botane*" என்ற கிரேக்க மொழிச் சொல் "செடி" என்று பொருள் தரும். தாவரம் என்பது இக்காலத்தில் நமது கண்ணுக்குப் புலனாகாமல் மிக நுண்ணியமாக உள்ள ஆயிரக்கணக்கான நுன்மங்கள், பாசி, காளான் முதலிய தாவர உயிர்களையும் பற்றி விவரித்தறிவதாகும். பொதுவாக தாவர அறிவு மூன்று வகையானது. அவை தாவர அமைப்பியல் தாவரக் குடும்பவியல் தாவரச் செயலியல் எனப்படும். இந்நாளில் உலகெங்கும் காணப்படும் தாவரங்கள் பூத்துக் காய்க்கும் இயல்புடையது. இவற்றை மரம், செடி, கொடி என்று பிரித்தனர். தாவர அறிஞர்கள் இவைகளெல்லாம் ஒரு விதையிலைத் தாவரம், இருவிதையிலைத் தாவரம் என்று பிரித்தனர்.

"நிலத்தில் வேர் விட்டோ, விடாமலோ குளம் போன்ற நீர்நிலைகளில் மிதந்து தண்டோடும், இலைகளோடும், வளர்வது தாவரம் என்று விளக்குகிறது." (நர்மதா தமிழ் அகராதி, ப.421)

"ஓரிடதிலிருந்து ஓரிடம் அசையாதவை. அவை மரம் செடி, கொடி, பூண்டு, புல் முதலியன தாவரம்" (நர்மதா தமிழ் அகராதி, ப.808)

என்று கூறுவது அபிதான சிந்தாமணி.

புல்லும், மரமும் என்பன ஓரறிவு உயிர்கள் ஆகும். புல், மரம் முதலியன உயிரற்றவை என்றே பலரும் கருதியிருக்கின்றனர். ஆனால் டாக்டர் ஜகதீச சந்திரபோஸ், நோபல் பரிசு பெற்ற அறிவியல் அறிஞர் சந்திரசேகரர் முதலியோர் புல், மரம், செடி, கொடிகளுக்குக்கூட உயிர் உண்டு என்பதை நிறுவியுள்ளார். ஆனால் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர் இதை உணர்ந்து பின்வரும் நூற்பாவில் எடுத்துரைத்த திறம் வியப்புக்குரியது.

புல்லும் மரனும் ஓரறி விளவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (தொல்.1527)

திருவாசகத்திலும் புல், பூண்டுகளைப் பற்றியச் செய்திகள் காணப்படுகின்றன.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிப்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்கனாய்
வல்அசுரர் ஆகி முனிவராயத் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்

மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன் (திருவாசகம், 26:32)

புல், பூண்டு, மரம், செடி, கொடி, பறவை, விலங்கு என்று மாணிக்கவாசகர் கூறிய உயிரின வளர்ச்சியின் கோட்பாட்டிற்கிணங்க டார்வின் பரிணாமக் கோட்பாடு அமைந்துள்ளது.

புல் → பூண்டு → மரம் → பறவை → விலங்கு → மனிதன் முதன் முதலில் ஆல்கா, பாக்டிரியா என்னும் நுண்ணுயிரிகள் தோன்றின. பின் விலங்கு, விலங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்ற உண்மையை மரபுப்படி காணமுடிகிறது.

தொல்காப்பியர் உயிரினப் பாகுபாட்டினை ஓரறிவு முதல் ஆறறிவு வரை அனைத்தையும் வகைப்படுத்தியுள்ளார்.

ஒன்றறி வதுவே ஊற்றறி வதுவே

இரண்டறி வதுவே அதனொடு நாவே

மூன்றறிவதுவே அவற்றொடு கண்ணே

ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே

ஆறறி வதுவே அவற்றொடு மனனே

நேர்தி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினர் (தொல். மரபு.27)

டார்வின் தனது கோட்பாட்டின் ஒரு உயிரிலிருந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப்பின் ஏற்பட்ட உயிரினங்களில் மாறுதல்கள் உண்டாக்கிக் குழியுடலியாய் தோன்றியது. பின் தட்டைப் புழுக்களாய் கணுக்காலிகளாய் பூச்சி இனங்களாய் உருவாயின. வளர்ச்சியின் பின் காலமாறுதலுக்கு மீனாய் நீர்நில வாழ்வனவாய் ஊர்வன ஆமை முதலை பறவை இனங்களாய் பாலூட்டிகளாய் வளர்ந்து வந்தன என்று கூறியுள்ளார். பல கோடி ஆண்டுகளுக்கு முன்பே இந்த உலகம் தோன்றிவிட்டது.

அதன்பின் உயிரினங்கள், தாவரங்கள் தோன்றின. தாவர இனம் தோன்றிய பிறகுதான் மற்ற உயிரினங்கள், தாவரங்கள் தோன்றின. தாவர இனம் தோன்றிய பிறகுதான் மற்ற உயிரினங்கள் தோன்றியிருக்கக் கூடும் என்ற உண்மையை அறிஞர்கள் கூறியுள்ளனர். முதலில் கண்ணுக்குத் தெரியாத உயிர் தோன்றிய பின் தான் சிறுசிறு உயிரியாக வளர்ச்சியடையத் தொடங்கின.

காலத்தின் மாறுதலுக்கேற்ப அந்த உயிர்கள் பெரிய பிராணிகளாகத் தோன்றின. இவ்வாறு சிறு உயிரினம் வளர்ந்து பெரிய உயிரினமாக வளர்வது பரிணாம வளர்ச்சி ஆகும்.

"பரிணாம வளர்ச்சியை 1840 ஆம் ஆண்டில் ஆங்கில நாட்டைச் சேர்ந்த டார்வின் என்பவர் கண்டுபிடித்துக் கூறினார். இவர் கண்டுபிடித்த பரிணாமக் கொள்கையைத்

தகுந்த ஆதாரத்துடன் 1859இல் வெளியிட்டார். இது டார்வின் பரிணாமக் கொள்கை ஆகும்" (மு.சேகரன், *அணுசக்தியும் ஓம் சக்தியும்*, ப.63)

அறிவியலின் கூற்றுப்படி தாவரங்களிலிருந்து மனித இனம் தோன்றியுள்ளது என்பதை அவர் தடுத்த ஆதாரத்துடன் வெளியிட்டுள்ளார்.

பண்டைய மக்கள் இயற்கைச் சூழலில் வாழ்ந்தார்கள். இதற்கு ஐந்திணைப் பாகுபாடு சான்றாகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் நிலப்பாகுபாடுகளில் கூறப்பட்டிருக்கும் முதல், கரு, உரிப்பொருள்கள் பண்டைய மக்களின் புலவர்களின் இயற்கை சான்ற அறிவுக்குச் சான்றாக விளங்குகின்றன. எட்டுத்தொகை நூல்களிலும் பத்துப்பாட்டு நூல்களிலும் விரிவான நிலையில் தாவரங்கள் பற்றியச் செய்திகள் அறியக் கிடக்கின்றன.

திருமுருகாற்றுப்படை இயற்கை இலக்கியம் என்னும் சிறப்பைப் பெறுகிறது. அருவிக்காட்சிகளை விளக்குகின்ற இறுதிப்பகுதியில் பல்வேறு மரங்கள், பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

தண்கமழ் அலர்இறால் சிதைய நன்பல
ஆசினி, முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்ப பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசி பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇ தத்துற்று
நன்பொன் மணிநிறம் கிளர பொன்கொழியா
வாழை முழுமுதல் துமிய தாழை
இளநீர் விழுக்குலை உதிரத்தாக்கி (திருமுருகு.300-308)

இப்பகுதியில் பலா, நாகம், வாழை, தென்னை ஆகிய தாவர வகைகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. முல்லைப்பாட்டு இருத்தல் உரிப்பொருளைச் சிறப்பிக்கும் தன்மையாகும். பொருள்தேடச் சென்ற தலைவன் தலைவியைச் சந்திப்பதாகக் கூறிச்சென்ற காலத்தில் மீண்டும் வருகிறான். தலைவன் கார்காலத்தில் திரும்பி வரும்போது முல்லை நிலம் செழிப்புற்றிருக்க வேண்டும். அத்தகையதொரு முல்லைநிலக் காட்சியைச் செழிப்புற்றிருக்கும் காட்சியைக் கொண்டு நப்பூதனார் அமைத்திருக்கிறார்.

செறியிலைக் காயா அஞ்சனம் மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடல் குவிமுகை அங்கை அவிழ
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கானம் நந்திய செந்நிலப் பெருவழி

வானம் வாய்த்த வாங்குகதிர் வரகின் (முல்லைப்.93-98)

மாங்குடி மருதனாரால் இயற்றப்பட்ட மதுரைக்காஞ்சியில் ஐந்து நிலவளங்களைக் கூறுவதும் போது தாவரங்கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய
குறுங்கதிர்த் தோரை நெடுங்கால் ஐயவி
ஐவன வெண்ணெலொடு அரில் கொள்பு நீடி
இஞ்சி மஞ்சள் பைங்கறி பிறவும்
பல்வேறு தாரமொடு கல்லகத் தீண்டி (மதுரைக்.286-289)

நெடுநல்வாடையில் குளிர்கால வருணனை இடம்பெறும் பகுதியில் மரம், செடி, கொடி முதலிய செய்திகள் பதியப் பெற்றுள்ளன.

புன்கொடி முசுண்டைப் பொறிப்புற வான்பூப்
பொன்போல் பீரமொடு புதல்புதல் மலரப் (நெடுநல்.13-14)
அம்கண் அகல்வயல் ஆர்பெயல் கலித்த
வண்தோட்டு நெல்லின் வருகதிர் வணங்க
முழுமுதற் கமுகின் மணியுறழ் எருத்தின்
கொழுமடல் அவிழ்த்த குருஉக்கொள் பெருங்குலை
நுண்ணீர் தெவிள வீங்கிப் புடைதிரண்டு
தெண்ணீர்ப் பசுங்காய் சேறு கொள முற்ற (நெடுநல்.21-26)

இப்பகுதியில் மழை தொடர்ந்து பெய்ததனால் சிறிய கொடிகளை உடைய முசுண்டைப் பூக்களும் பொன் போன்ற நிறமுடைய பீர்க்கம் பூக்களும் புதர்களில் பூத்திருந்தன. வயல்களில் நெற்கதிர்கள் முற்றி விளைந்தன. பாக்குக் காய்கள் நீரினால் முற்றின என்னும் செய்திகள் கூறப்படுகின்றன. பத்துப்பாட்டில் இடம்பெற்றிருக்கும் குறிஞ்சிப்பாட்டு தொண்ணூற்று ஒன்பது வகை மலர்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றது. கபிலர் குறிஞ்சிப்பாட்டில் தொண்ணூற்று ஒன்பது வகை மலர்களை குறிப்பிட்டிருப்பது அவர் இயற்கையின் மீது கொண்ட நோக்கும் நிலையை எடுத்துக் காட்டுகிறது. இதனை குறிஞ்சிப்பாட்டில் வரும்.

வள் இதழ்
ஒண் செங் காந்தள், ஆம்பல், அனிச்சம்,
தண் கயக் குவளை, குறிஞ்சி, வெட்சி,
செங் கொடுவேரி, தேமா, மணிச்சிகை,
உரிது நாறு அவிழ் தொத்து உந்தூழ், கூவிளம்,
எரி புரை எறுழம், சுள்ளி, கூவிரம்,
வடவனம், வாகை, வான் பூங் குடசம்,

எருவை, செருவிளை, மணிப் பூங் கருவிளை,
பயினி, வானி, பல் இணர்க் குரவம்,
பசும்பிடி, வகுளம், பல் இணர்க் காயா,
விரி மலர் ஆவிரை, வேரல், சூரல்,
குரீஇப் பூளை, குறுநறுங் கண்ணி,
குருகிலை, மருதம், விரி பூங் கோங்கம்,
போங்கம், திலகம், தேங் கமழ் பாதிரி,
செருந்தி, அதிரல், பெருந் தண் சண்பகம்,
கரந்தை, குளவி, கடி கமழ் கலி மா,
தில்லை, பாலை, கல் இவர் முல்லை,
குல்லை, பிடவம், சிறுமாரோடம்,
வாழை, வள்ளி, நீள் நறு நெய்தல்,
தாழை, தளவம், முள் தாள் தாமரை,
ஞாழல், மௌவல், நறுந் தண் கொகுடி,
சேடல், செம்மல், சிறுசெங்குரலி,
கோடல், கைதை, கொங்கு முதிர் நறு வழை,
காஞ்சி, மணிக் குலைக் கள் கமழ் நெய்தல்,
பாங்கர், மராஅம், பல் பூந் தணக்கம்,
ஈங்கை, இலவம், தூங்கு இணர்க் கொன்றை,
அடும்பு, அமர் ஆத்தி, நெடுங் கொடி அவரை,
பகன்றை, பலாசம், பல் பூம் பிண்டி,
வஞ்சி, பித்திகம், சிந்துவாரம்,
தும்பை, துழாஅய், சுடர்ப் பூந் தோன்றி,
நந்தி, நறவம், நறும் புன்னாகம்,
பாரம், பீரம், பைங் குருக்கத்தி,
ஆரம், காழ்வை, கடி இரும் புன்னை,
நரந்தம், நாகம், நள்ளிருள் நாறி,
மா இருங் குருந்தும், வேங்கையும், பிறவும்,
அரக்கு விரித்தன்ன பரு ஏர்அம் புழகுடன் (குறிஞ்சிப்.62-95)

என்னும் அடிகள் பலகாலங்களில் மலரும் மலர் வகைகளை எடுத்துக்காட்டுகின்றன. கபிலரின் இயற்கை அறிவினை தாவரங்கள் மீது அவர் கொண்டிருந்த ஈடுபாட்டை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது.

தாமரை

தாவரப் பெயர்: நிலம்பியம் ஸ்பீசியோசம்.

நீரில் வளரும் பூக்களில் தாமரையும் ஒன்றாகும். கமலம் என்ற பெயருண்டு. இவற்றில் வெண்தாமரை, செந்தாமரை என இரண்டு வகைகள் உண்டு. தாமரை நீலம்போ (Nelumbo), நீலம்பியம் (Nelumbium) என்னும் தாவரப் பேரினத்தைச் சார்ந்ததாகும். நீலம்பே நீயுசிபெரா (Nelum benuafera) அல்லது நீலம்பியம் ஸ்பீணியோசம் (Nelumbiam speciosm) என்னும் தாவரவியல் பெயர்கள் தாமரையினைக் குறிக்கும். இது நீர் நிலைகளிலும் வாழும் இருவத்திரை தாவரமாகும். இந்தியா முழுவதிலும் காணப்படும் ஒரு பருவச்செடி வகையைச் சார்ந்ததாகும். செழுமலர், கொடுஞ்சி, செந்தாமரை, வெ்ணதாமரை கமலம், பதுமம், அகப்பூ, வனசம், பங்கயம், இதயப்பூ, முளர், தெய்வப்பூ முதலிய பெயர்களில் அழைக்கப்படுகிறது (கு.சீனிவாசன், சங்க இலக்கியத் தாவரங்கள், ப.60).

தாமரை தண்ணீரில் வாழும் ஒரு கொடி, தாமரையின் தண்டானது, அது வளருகின்ற சேற்றில் புதைந்திருக்கும். அதிலிருந்து இலைகளும் மலர்களும் நீண்டக் காம்புகளைக் கொண்டு நீர் பரப்பின் மேலே மிதந்து வளரும் இலைக்காம்பிலும் மலர்க்காம்பிலும் முட்கள் அதிகமாக இருக்கும். அதனால் முள் நிறைந்த தாளையுடைய தாமரை என்ற சங்கப் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். தாமரையானது மருத நிலத்திற்கு உரியது. இலைக்காம்புகள் நுண்ணிய துளைகளையுடையது. இவற்றுள் காற்று நிறைந்திருக்கும். அதனால் தான் இதனுடைய இலைகளும் மலர்களும் நீரில் மிதக்கின்றன. இலை வடிவமைப்பானது,

> ***"ஒரு வகையான கொழுப்புப் பொருள் இலைப் பரப்பில் உள்ளது. அதனால் நீர்த்துளி அதில்தங்குவதில்லை, ஒட்டுவதுமில்லை" (சௌரிராஜன், பதார்த்த குண பாடம், ப.455)***

குளத்தில் காணப்படுகின்ற செந்தாமரையானது ஒளிவீசுகின்ற தன்மையுடையது என்றும் மலர்களை தெய்வங்கள் விரும்புதலின் காரணமாக அவற்றில் வீற்றிருத்தலையும் பெரும்பாணாற்றுப்படை எடுத்துரைக்கிறது.

நீத்துடை நெடுங்காயம் தீப்பட மலர்ந்த
கடவுள் ஒண்பூ அடைதல் ஓம்பி
உறைகால் மாறிய ஓங்கு உயர் நனந்தலை (பெரும்பாண்.289-291)

'நெடுங்காயம் தீப்பட மலர்ந்த' என்பது செந்தாமரை மலர்கள் மிகுதியாக மலர்ந்ததின் காரணமாக குளம் தீப்பற்றி எரிவது போன்று காணப்படுகிறது என்று ஆசிரியர் கூறுகிறார்.

தாவரத்தின் இயல்பு

சேற்றில் வளரும் தன்மைக் கொண்ட தாமரையானது நூற்றுக்கணக்கான இதழ்களை உடையது. எனவே தான் இம்மலரை நூற்றிதழ் அலரி என்று அழைத்ததை பின்வரும் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றது.

சேற்று விளர் தாமரை பயந்த ஒண்கேழ்
நூற்று இதழ் அலரின் நிரை கண்டன்ன (புறம்.27:1-2)

தாமரையானது மீன்கள் அதிகமாக காணப்படுகின்ற நீர்நிலைகளில் தழைத்து வளரும் தன்மை உடையது என்பதை,

மீன்முதிர் இலஞ்சிக் கலித்தாமரை (அகம்.186:3)

என்ற அகநானூற்றுப் பாடல் வரியின் மூலம் சுட்டப்படுகின்றன.

தாமரையில் இலைக்காம்பிலும் மலர்க்காம்பிலும் முட்கள் மிகுதியாக இருப்பதை சங்கப் பாடல்கள் விளக்குகின்றன.

தாழை தவளம் முட்டாள் தாமரை (குறிஞ்சிப்.80)
முள் அரைத்த தாமரை (சிறுபா்ண.144)

மலர்

தாமரைப் பூவானது கதிரவனின் ஒளிபட்டவுடன் மலர்ந்து வெப்பத்திணைப் பூவினுள் ஏற்றுக்கொள்ளும். பின்பு மாலை வேளையில் பனி பெய்வதால் அம்மலரானது கூம்புகிறது என்பதை,

. . . . .பனியே
விளங்குகதிர் தொகுப்பக் கூம்பி ஐயென
அலங்கு வெயிர் பொதித்த தாமரை
உள்ளகத் தன்ன சிறுவெம் மையளே (குறுந்.276:4-6)

என்ற குறுந்தொகை பாடல் மூலம் நாம் தெரிந்துக்கொள்வோம்.

தாமரைப்பூவின் இதழைக் காய்ச்சி குடித்து வந்தால் உடலினுடைய வெப்பத்தை குறைக்கும் தன்மைக் கொண்டது. தாமரையின் கிழங்கினை அரைத்துக் குடித்தால் கண் பார்வை நீங்கும். தாமரை விதை உடலை பலமாக்குகின்றது. வெண்தாமரைப் பூ உடல் வெப்பத்தால் ஏற்படும் கண் எரிச்சல் காய்ச்சல், நீர்வேட்கை ஆகியவற்றைக் குணமாக்கும் தன்மை உடையது.

காந்தள்

காந்தள் மலைப்பகுதிகளில் குளிர்ந்த சூழ்நிலையில் வாழும் செடியாகும். இதன் தாவரவியல் பெயர்: குளோரியோசா சுபர்பா (Gloriosa superba) காந்தள் ஒரு சிறு ஏறு கொடி. பூக்கும் ஒருவித்திலைத் தாவரம். இலைகள் அக்னறு நுனி குறுகி பற்றுக் கம்பியாக மாறி சுருண்டு இருக்கும். அழகான பூக்களை உடையது. இதன் பூங்கொத்து ஆதிசேடனின் தலை போலத் தோன்றும் தன்மை உடையது. மலர்கள் முதலில் பச்சை நிறமாகத் தோன்றி மஞ்சள் நிறமாக மாறி பின்னர் தீ நிறமாகி குருதிச் சிவப்பு நிறமாகவும் கிரிம்சன் நிறமாகவும் மாறும் இயல்புடையது. பச்சைத் தாவி எனப்படும். கிழங்கைத் தரைக்கு அடியில் கொண்டது. இதனுடைய கிழங்கு கலப்பைப் போன்றியிருப்பதால் ''கலப்பைக் கிழங்கு'' என்று பெயரிட்டனர். காய் நீண்டு காக்கையின் மூக்குப் போல் சிறிது வளைந்து உருவத்தில் ஒத்திருப்பதால் காக்கை மூக்குச்செடி எனப்பட்டது. தோன்றி, கோடல், கார்த்திகைப்பூ, கலப்பைக் கிழங்கு,காக்கை மூக்குச் செடி என்பது இவற்றின் வேறு பெயர்கள் ஆகும். குறிஞ்சி நிலத்திற்குரிய சிறந்த மலர்களுள் காந்தளும் ஒன்று. காந்தள் வெண்காந்தள், செங்காந்தள் என இருவகைப்படும். செங்காந்தள் நெருப்புப் போலும் பூவினை உடையது. இதனை முருகபெருமான் அணிந்து இருந்தார் என்பதையு, காந்தள் மலர் குலையாகப் பூப்பது அது கை விரல்களைப் போலப் பூக்கும் என்பதை,

செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும் (சிறுபாண்.167)

காந்தள் மலரின் இதழ் வளைந்தாற் போன்று காட்சி அளிக்கும். இச்செடி விண்ணைத்தொடும் சிகரங்களிலும் வளரும். இதன் மலர்கள் குளிர்ந்தவை. மணமுள்ளவை என்பதை,

வளையுடைந்தன்ன வள்ளிதழ்க் காந்தள் (மலைபடு.519)

என்ற வரிகள் மூலம் அறியலாம்.

அரசனானவன் போரில் வென்று திரும்பிவரும் வழியில் வெண்காந்தளின் குவிந்த அரும்புகள் அழகிய கைகளைப் போன்று விரிந்து காணப்படும் என்பதை,

கோடல் குவிமுகை அங்கை அவிழ (முல்லைப்.9)

என்ற முல்லைப்பாடல் வரிகள் பதிவு செய்கிறது.

மலர்

காந்தள் பல இடங்களில் உள்ள புதர்களிலெல்லாம் விளக்கு போல ஒளிவீசிக் கொண்டிருக்கும் என்பதை,

. . . . பல்வயின்

தோன்றி தோன்றுபு புதல் விளக்கு உறாஅ (நற்.69:5-6)

என்ற பாடல் வரிகள் விளக்குகிறது.

காந்தள் மலர் மலைச்சாரலில் எல்லா இடங்களிலும் பரவி மணத்தை வீசுகின்றது. இது மண மனையில் விளங்கும் மணம் போன்றது என்று அகநானூறு விளக்குகிறது.

மணமாலை கமழும் கானம் (அகம்.107)

பள்ளங்களில் மலர்ந்துக் காணப்படும் காந்தளானது பார்ப்பதற்கு சங்கு உடைந்தது போன்ற தோற்றம் அளிக்கிறது என்பதை அகநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கின்றது.

கோடு உடைந் தன்ன கோடற் பைம்பயிர் (அகம்.23:6)

காந்தள் செடியானது அருவி நீரை பெற்று வளர்ந்த நிலையில் மொட்டுகளானது இதழ்களை விரித்து மணம் மிகுந்து வீசும் என்பதை,

அருவி ஆழ்ந்த தண்நறுங் காந்தள்
முகை அவிழ்ந்து ஆனாநறும் நறுநுதல் (குறுந்.259:2-3)

காந்தளின் மலர்ந்த பூவானது தெய்வத்திற்கு சூட்டுவதற்குரியது என்பதை அறிந்தும் அதில் தேனை உண்டது உண்டு என்று பதிற்றுப்பத்துப் பாடல் குறிப்பிடுகிறது.

மலர்ந்த காந்தள் மாறாது ஊதிய
கடும் பறைத் தும்பி சூர் நசைத்தாஅய் (பதிற்.67:79)

காந்தள் கொடியில் வேருடன் கிழங்கு உண்டாகும். அதற்கு பச்சை நாவி என்று பெயர். இதில் கால்சிசின் என்ற கொடிய நச்சுப்பொருள் காணப்படுகிறது. இந்த நச்சுப்பொருளை பல்வேறு செயல்களுக்கு பயன்படுத்துகின்றனர். செங்காந்தள் பாம்புக்கடி, தேள்கடி போன்றவற்றிற்கு மருந்தாக பயன்படுகிறது. கலப்பைக் கிழங்கு சாறைக் கொடுத்தால் வாதம், குட்டம், வயிற்றுவலி, சூலை போன்ற நோய்கள் நீங்கும்.

முல்லை

முல்லை பூக்கும் இருவித்திலைக் கொடி தாவரம். இதன் தாவரவியல் பெயர்: ஜாஸ்மின் ஆரிகுலேட்டம் (*Jasminum quriculatum*) முல்லை பூக்கும் இருவித்திலைக் கொடி தாவரம். சங்க இலக்கியங்களில் மிகுதியாகப் பேசப்படுவது முல்லை ஆகும். முல்லைநிலம் என்ற பெயர் முல்லை பெயராலே ஏற்பட்டதாகும். இலைகளானது எதிர் அடுக்கிலும் மாற்றடுக்கிலும் காணப்படும். இதனுடைய மலர் நறுமணம் உடையது. இரவில் இதனுடைய பூ மணம் பரப்பும் தன்மையுடையது. முல்லை, கொகுடி, தளவம், செம்மல், மௌவல், மாகதி என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. முல்லைத் திணைக்குரிய தாவரம் ஆகும்.

உயரமான புதர்களின் மேற்பகுதியில் படர்ந்து வளரும் முல்லைப் பூவானது கார்காலங்களில் அதிகமாக பூக்கும் தன்மையும், நறுமணம் மிக்கதாய் விளங்குவதையும்,

சிறுவீ முல்லை தேகமழ் பசுவீ

பொறிவரி நல்மான் புதர்முகம் கடுப்ப

தண்புதல் அணிபெற மலர வண்வெயல்

கார் வரு பருவம் என்றனர் மண் இனி *(நற்.248:1-4)*

என்ற நற்றிணைப் பாடல் மூலம் அறியலாம்.

சங்ககாலத்தில் கோடைமலை என்னும் நாட்டினை வெண்ணிறமான முல்லைப்பூக்கள் வேலி அரணாக அமைத்திருந்து, பாதுகாத்து வந்தன என்னும் வரலாற்றுச் செய்தியை,

தாள் உளம் தபுத்த வாள்மிகு தானை

வேள்வீ வேலிக் கோடைப் பெருந *(புறம்.205:5-6)*

என்னும் புறநானூறு பாடலொன்றின் வழியாக அறியலாம்.

முல்லை மலர்

முல்லைப் பூவானது மிகவும் நறுமணம் மிக்கது என்பதால் அதனை பெண்கள் தங்களுடைய கூந்தலில் விரும்பிச் சூடியும் கொண்டார்.

தொழுவத்து

சில்லைச் செவிமறைக் கொண்டவன் சென்னிக்குவி முல்லைச்

கோட்டாங்காழ் கோட்டின் எடுத்துக் கொண்டாடிய

ஏழை யிரும்புகர் பொங்க அப்பூவற்தென்

கூழையுள் வீழ்ந்தன்று மன் *(முல்லைக்.107:5:9)*

என்ற முல்லைக்கலியால் அறியலாம்.

கார்காலங்களில் பாறைகளின் மீது சிவப்பு நிறமான முல்லையின் அரும்புகள் படர்ந்து காணப்பட்டதை,

படுமழை பொழிந்த பாறை மருங்கில்

சிரல்வாய் உற்ற தளவின் பரல் அவல்

தான் கெழு நாடற் படர்ந்த தோர்க்குக் *(நற்.61:7-9)*

என்ற நற்றிணை வரிகளால் அறியலாம்.

கார்காலத்தில் செம்முல்லையின் கொடியுடன், நிலவினைப் போன்ற வெண்ணிறமான முல்லை அரும்பு கொடிகளும் பின்னிப்பிணைந்து படர்ந்திருக்கும் காட்சியைப் புலவரொருவர்,

தளவின் பைங்கொடி தழீஇப் பையென

நிலவின்ன நேரம்பு பேணிக்

கார் நயற் தெய்து முல்லையவர் *(ஐங்.454:1-3)*

என்று ஐங்குறுநூற்றில் காட்டுகிறார்.

முல்லைப் பூவானது விழாக்களில் அலங்காரப் பொருளாக பயன்படுகிறது. முல்லைப்பூவில் இருந்து மணமுள்ள எண்ணெய் எடுக்கப்படுகிறது. முல்லைப் பூவினுடைய சாற்றை மூன்று துளிகள் மூக்கில் விட்டால் தலைவி குறையும் தன்மை உடையது.

முசுண்டை

முசுண்டையானது பூக்கும் தாவர வகையைச் சார்ந்த கொடியாகும். இதன் தாவரவியல் பெயர்: ரைவியா ஆர்னேட்டா (Rivea ornata, choisty) இதனை முசுட்டை என்றும் அழைக்கப்படுகிறது. இது குளிர்ந்த இலையை உடையது. இவற்றில் நாற்பத்து ஏழு வகைகள் உள்ளது. இதனுடைய பூவானது தனித்தனியே பூக்களாக காணப்படுகிறது. சங்க இலக்கியங்களில் புன்கொடி முசுண்டை என்றும் கொழுங்கொடி முசுண்டை என்றும் அழைக்கின்றனர். முசுண்டைப்பூ வெண்ணிறமானது. இக்கொடியானது பெரும்பாலும் வறட்சியான காடுகளில் காணப்படுகிறது. இது முல்லைத் திணையைச் சார்ந்த தாவரம் ஆகும்.

பூக்கள்

முசுண்டையுடைய பூவானது வெள்ளை நிறத்தில் காணப்படும் என்பதை நெடுநல்வாடை, மலைபடுகடாம், அகநானூறு முதலிய சங்கப் பாடல்களின் வரிகள் உணர்த்துகிறது.

புன் கொடி முசுண்டைப் பொதிப்புற வான்பூ (நெடு.13)
புன்கொடி முசுண்டை (மலைபடு.101)

முசுண்டை மலரானது நடுயாமத்தில் மலரும் தன்மை உடையது என்பதை,

குன்று குளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்
புன்கொடி முசுண்டைப் பொதிபுற வான்பூ (நெடு.12-13)

என்ற நெடுநல்வாடையின் வரிகளின் மூலம் தெளிவாகிறது. மழை நின்ற பிறகு வானமானது தெளித்துக் காணப்படும். அதில் விண்மீன்கள் எவ்வாறு இருக்குமோ அதனைப் போன்று முசுண்டைக் கொடியும் மலரும் என்கிறார். இளங்கண்ணனார்,

மழையில் வானம் மீன் அணிந்தன்ன
குழையாமல் முசுண்டை வாலிய மலர (அகம்.264:1-2)

என்ற பாடல் வரிகளின் மூலம் அறியலாம்.

முசுண்டை மலரானது கார்த்திகை விண்மீன்கள் போல பூத்து இருந்தது என்று பெருங்கௌசிகனாரும் கூறுகிறார்.

அகலிரு விசும்பின் ஆஅல் ஆரல் போல
வாலிதின் விரிந்த புன்கொடி முசுண்டை (மலை.106)

என்ற பாடல் வரிகள் புலப்படுத்தும்.

வீட்டின் முற்றத்தில் நிழலுக்காக முஞ்ஞை என்ற கொடியுடன் நறுமணத்திற்காக முசுண்டைக் கொடியும் வளர்க்கும் வழக்கம் காணப்பட்டது. அக்கொடியினுடைய நிழலில் பலரும் துயில் கொண்டனர் என்ற குறிப்பினைப் புறநானூற்றுப் பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றன.

முஞ்ஞையொரு முசுண்டை பம்பி

பந்தர் வேண்டாப் பலர் தூங்கு நிழல் (புறம்.320:1-2)

வீட்டின் முற்றத்தில் அழகுக்காக இக்கொடி வளர்ந்துள்ளது என்பதை புறநானூறு கூறுகின்றன.

பகன்றை

பகன்றை என்பது ஒரு சிறு கொடியாகும். இதனை சிவதைக் கொடி என்றும் அழைக்கப்படும். இது சங்க இலக்கியத்தில் மணமில்லாத பூ என்று கூறப்படுகிறது. இதன் தாவரவியல் பெயர்: ஆப்பர்குலைனா டர்பீத்தம் (Operculina turpethum) பனித்துறைகளில் புதர்தொறும் வளர்ந்து பூக்கும் தன்மையுடையது. இதனுடைய இலைகள் பெரியது. மலர்கள் வெண்ணிறம் உடையது.

பூ

பகன்றைப் பூவானது பனிக்காலத்தில் மலரும் தன்மை உடையதும் கொடி இனத்தைச் சார்ந்ததும் பெரிய பூக்களைக் கொண்டது ஆகும். இப்பூக்களின் தேன் மிகுதியாக காணப்படும். இதனுடைய மணமானது கள்ளின் மணத்தைப் போல இருப்பதால் வீட்டில் இருப்பவர்கள் இதனை விரும்புவதில்லை. மலரினது அமைப்பானது கிண்ணத்தைப் போன்றும் வெள்ளி வீட்டிலைப் போன்றும் மலர்ந்து காணப்படும். ஆடை வெளுப்பவள் முறுக்கிய ஆடையைப் போல இதனுடைய மலர் சரிந்துக் காணப்படும் என்பதை சங்கப் பாடல்கள் அழகாக எடுத்துக் கூறுகின்றன.

பகன்றைப் பூவுற நீண்ட பாசடைத் தாமரை

கண்பொர ஒளிவிட்ட வெள்ளிய வள்ளத்தால் (கலித்.75)

போர் இலைப் பகன்றைப் பொதிஅவிழ் வான்பூ

இன் கடுங்களின் மணம் இல கமழும்(குறுந்.330:4-5)

பகன்றைப் பூவானது நறுமணம் இல்லாததைப் பற்றி கபிலர் குறிஞ்சிப்பாட்டில் கூறியுள்ளார். ‘‘பகன்றைப் பாசலம் பல்பூம் பிண்டி’’ நறுமணம் இல்லாத இப்பூவானது

வெள்ளை நிறமாக இருப்பதனால் கள் விற்கும் மகளிர் இந்தப் பூவினை கண்ணியாகச் சூடிக் கொண்டனர் என்ற செய்தி மலைபடுகடாம் பாடல் வரியிலும் சுட்டப்படுகின்றது.

பகன்றைக் கண்ணிப் பழையர் மகளிர்(மலைபடு.459)

நறுமணம் இல்லாத இப்பூவை பிறருக்கு ஒன்றும் ஈயாது வீழுகின்ற உயிரினத்திற்கு ஒப்பிட்டுக் கூறுகிறார்.

பனித்துறைப் பகன்றை நறைக் கொள் மாமலர்

சூடாது வைகியாங்கு பிறருக்கு ஒன்று

ஈயாது வீழும் உயிர்தவிப் பலவே (புறம்.235:18-19)

என்ற புறநானூற்றுப் பாடல் மூலம் ஔவையார் கூறுகிறார். பகன்றைக் கொடியானாது சிவப்பாக இருக்கும் தன்மை உடையது என்பதை அகநானூற்றுப் பாடல் ஒன்று குறிப்பிடும்.

குரூவுக் கொடிப் பகன்றை சூடிமூதூர்

பார்சொறி மன்னரின் புகுதரும் (அகம்.316:6)

சங்ககால மகளிர் குவித்து வைத்து விளையாடிய மலர்களில் ஒன்றாக பகன்றை பயன்பட்டதை குறிஞ்சிப்பாட்டு மூலம் அறியலாம். வயதான பசுவிற்கு உணவாக பகன்றையும் பாகல் கொடியையும் அறுத்துக் கொடுப்பவர் என்பதை அகநானூற்று அடிகள் கூறுகின்றன.

நரந்தம்

நரந்தம் என்பது சிறுமரம். இதன் தாரவியல் பெயர்: சிட்ரஸ் மெடிகா *(Citrus medica)* இம்மரத்தில் பூக்களானது கொத்தாக மலரும். பெரும்பாலும் கனிக்காக வளர்க்கப்படுகிறது. நரந்தம் என்பதற்கு “நரந்தம்பூ” என்று நச்சினார்க்கினியர் குறிஞ்சிப்பாட்டில் கூறியுள்ளார். இதனுடைய மலர் நறுமணம் மிக்கது. இம்மரத்தினுடைய தண்டில் முட்கள் நிறைந்துக் காணப்படும். இது மருதத்திணையைச் சார்ந்தது.

பூவின் மணம்

தலைவியின் கூந்தலானது பூவின் மணத்தைப் போன்று இருக்கும் என்று குறுந்தொகைப் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. மேலும், புலால் நாற்றம் வீசுகின்ற ஔவையாரின் தலையை நரந்தம் பூவின் மணம் கமழும் தன் கையால் அதியமான் தடவினான் என்பதை,

நரந்தம் நாறும் குவை இருங் கூந்தல் (குறுந்.52:3)

நரந்தம் நாறு இருங்கூந்தல (கலித்.59)

என்ற சங்கப் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

யாழிற்கு நரந்தத்தால் ஆன மாலையைச் சூட்டும் வழக்கம் இருந்ததை புறநானூற்றுப் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றது.

நரந்தப் பல்காழ்க் கோதை சுற்றிய

ஐதுஅமை பாணி வணர்கோட்டுச் சீறியாழ் (புறம்.302:4-5)

நரந்தம் பூவினை மகளிர் தங்களுடைய கூந்தலில் சூடினர் என்பதை அகநானூற்றுப் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

நரந்தம் நாறும் குவை இருங் கூந்தல்

இளந்துணை மகளிரொடு (அகம்.266:4-5)

வாசனைத் திரவியங்களாகவும் அதனுடைய சுவைக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. தென்னிந்தியாவில் உணவிற்காக நரந்தத்தை பயன்படுத்துகின்றனர்.

முடிவுரை

சங்கத் தமிழர்கள் தங்களை சுற்றி இருந்த தாவரங்களை பற்றிய நுணுக்கங்களை நன்கு அறிந்து வைத்திருந்தனர். சங்க இலக்கியத் தாவரங்களாக கருதப்படுவன புல், பூண்டு, செடி, கொடி, சிறுமரம் முதலயின ஆகும்.

- தாமரையானது மீன்கள் அதிகமாக காணப்படுகின்ற நீர்நிலைகளில் தழைத்து வளரும்தன்மையுடையது என்பதை அகநானூறு சுட்டிக்காட்டியுள்ளது.
- காந்தள் மலைப் பகுதிகளில் குளிர்ந்த சூழ்நிலையில் வாழும் செடியாகும். காந்தள் பல இடங்களில் உள்ள புதர்களிலெல்லாம் விளக்கு போல ஒளிவீசிக் கொண்டிருக்கும் என்பதை நற்றிணை சுட்டிக்காட்டுகிறது.
- சங்க இலக்கியங்களில் முல்லை மலர் மிகுதியாக பேசப்படுகின்றன. முல்லை மலரைக் கற்புக்கு அடையாளமாக கொண்டிருந்தனர். இம்மலரை பயன்படுத்தி தெய்வத்தை வணங்கினர். முல்லை மலரானது கார்காலத்தில் மிகுதியாக மலரும். முல்லைப்பூவில் இருந்து மணமுள்ள எண்ணெய் எடுக்கப்படுகிறது என்று குறிப்பிடுகின்றன.
- பகன்றைப் பூவானது குறுமணம் இல்லாததைப் பற்றி கபிலர் குறிஞ்சிப்பாட்டில் கூறியுள்ளார்.
- நரந்தம் பூவினை மகளிர் தங்களுடைய கூந்தலில் சூடினர் என்பதை அகநானூறு சுட்டிக்காட்டியுள்ளது.

துணைநூற் பட்டியல்

ஆனந்தன், சு. தமிழ் இலக்கிய வரலாறு, கண்மணி பதிப்பகம், திருச்சி, 2002.

இராகவையங்கார், இரா., குறுந்தொகை, கவின்கலை அச்சகம், சென்னை, 1993.

இராசா, ஆ.வே., திருக்குறள், திருவள்ளுவர் பதிப்பகம், வைரி செட்டிப் பாளையம், 2001.

இராசா, கி. தமிழர் இலக்கிய வரலாறு, அன்னை நிலையம், திருச்சி, 2001.

இராமகிருட்டிணன், ஆ., தமிழக வரலாறும், தமிழர் பண்பாடும், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 2004.

இளம்பூரணர் (உ.ஆ.). தொல்காப்பியம், பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை, 2005.

சாமிநாத ஐயர், உ.வே., புறநானூறு மூலமும் உரையும், தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1985.

சிங்கார வேலன், சொ., தொல்காப்பியம், கழக வெளியீடு, சென்னை, 1998.

சிதம்பரனார், சாமி., எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், அப்பர் அச்சகம், சென்னை, 1943.

சுப்பிரமணியன், ச.வே., தொல்காப்பியம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1998.

செயபால், இரா., அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

சோமசுந்தரனார், பொ.வே., புறப்பொருள் வெண்பாமாலை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2002.

ஞானசம்பந்தன், அ.ச., இலக்கியக் கலை, அப்பர் அச்சகம், சென்னை, 1955.

நாராயண வேலுப்பிள்ளை, ம., பதிற்றுப்பத்து, கண்ணப்பா ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை, 1994.

பாரதிதாசன், தேனருவி, பாரி நிலையம், சென்னை.

புலியூர்க்கேசிகன் (உ.ஆ.). அகநானூறு, பாரி நிலையம், சென்னை, 1960.

புலியூர்க்கேசிகன் (உ.ஆ.). குறுந்தொகை, பாரி நிலையம், சென்னை, 1980.

புலியூர்க்கேசிகன் (உ.ஆ.). சிலப்பதிகாரம், பாரி நிலையம், சென்னை, 1978.

புலியூர்க்கேசிகன் (உ.ஆ.). நற்றிணை, பாரி நிலையம், சென்னை, 1980.

புலியூர்க்கேசிகன் (உ.ஆ.). புறநானூறு, பாரி நிலையம், சென்னை, 1958.

மாணிக்க வாசகன், ஞா. (உ.ஆ.). சிலப்பதிகாரம், உமா பதிப்பகம், சென்னை, 1995.

மாணிக்கம், வ.சுப., தமிழ்க் காதல், பாரி நிலையம், சென்னை, 1962.

மோகன், இரா., சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, திருவள்ளுவர் கணிப்பொறி அச்சகம், தஞ்சாவூர், 2004.

References

Ananthan, S. Tamil Ilakkiya Varalaru, Kanmani Pathippagam, Trichy, 2002.

Ragavaiyengar, R., Kurunthogai, Kavinkalai Achagam, Chennai, 1993.

Rasa, A.V., Thirukkural, Thiruvalluvar Pathippagam, Vairi Chetti Palayam, 2001.

Rasa, Ki. Tamilar Ilakkiya Varalaru, Annai Nilayam, Trichy, 2001.

Ramakritinan, A., Tamilaga Varalarum, Tamilar Panpadum, Sarvodaya Ilakkiya Pannai, Madurai, 2004.

Ilampooranar (Ed.). Tholkappiyam, Porulathikaram, Saratha Pathippagam, Chennai, 2005.

Saminatha Iyer, U.Ve., Purananooru Moolamum Uraiyum, Tamil University, Thanjavur, 1985.

Singaravelan, So., Tholkappiyam, Kazhaga Veliyeedu, Chennai, 1998.

Chidambaranar, Sami., Ettuthogaiyum Tamizhar Panpadum, Appar Achagam, Chennai, 1943.

Subramaniyan, S.Ve., Tholkappiyam, Manivasagar Pathippagam, Chennai, 1998.

Jayabal, R., Agananooru, New Century Book House, Chennai, 2004.

Somasundaranar, P.V., Puraporul Venbamalai, Thirunelveli Thenninthiya Saiva Siddhantha Noorpathippu Kazhagam, Chennai, 2002.

Gnanasambandan, A.S., Ilakkiya Kalai, Appar Achagam, Chennai, 1955.

Narayana Velupillai, M., Pathitrupathu, Kannappa Art Printers, Chennai, 1994.

Bharathidasan, Thenaruvi, Pari Nilayam, Chennai.

Puliyoorkesikan (Ed.). Agananooru, Pari Nilayam, Chennai, 1960.

Puliyoorkesikan (Ed.). Kurunthogai, Pari Nilayam, Chennai, 1980.

Puliyoorkesikan (Ed.). Silappathikaram, Pari Nilayam, Chennai, 1978.

Puliyoorkesikan (Ed.). Natrinai, Pari Nilayam, Chennai, 1980.

Puliyoorkesikan (Ed.). Purananooru, Pari Nilayam, Chennai, 1958.

Manickavasagan, G. (Ed.). Silappathikaram, Uma Pathippagam, Chennai, 1995.

Manickam, V.Suba., Tamil Kathal, Pari Nilayam, Chennai, 1962.

Mohan, R., Sanga Ilakkiyam, Pathupattu, Thiruvalluvar Kanippori Achagam, Thanjavur, 2004.

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com